**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**நாள். 03.11.2025.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**அசல் வழக்கு எண். 108/2023**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 03ம் நாள் திங்கட்கிழமை உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பானுமதி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | தசரதன் | வயது | : | 62 |
| ஊர் | : | கோவிலூர் | தொழில் | : | இல்லத்தரசி |

**வா.சா. 1 : (பானுமதி) பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் அவர் எந்த வேலையும் செய்யவில்லை. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் இல்லத்தரசியாக உள்ளேன். எனக்கும் எனது கணவருக்கும் எந்த வருமானமும் இல்லை என்றால் சரிதான். அரசாங்கத்தால் முதியோர் உதவித்தொகை கொடுப்பதை வைத்துதான் வாழ்க்கை நடத்தி வருகிறோம். மேற்படி உதவி தொகையை தவிர வேறு எந்த வருமானமும் இல்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதி என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அதில் உள்ள சங்கதிகள் எனது வழக்கறிஞர் எனக்கு படித்துக் காண்பித்தாரா என்றால் இல்லை.

2. பிரதிவாதி விஜயகுமாரின் மனைவி எப்போது காலமானார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அப்போது நான் என் மகள் வீட்டில் இருந்தேன். 10, 20 நாட்கள் கழித்துதான் எனக்கு விவரம் தெரிய வந்தது. நான் தாக்கல் செய்துள்ள அண்டிபாண்டில் யார் சாட்சிக் கையொப்பம் செய்தார்கள் என்றால் பிரதிவாதியின் மனைவியும் அவரது அம்மாவும் ஆவார்கள். மேற்படி கையொப்பமானது பிரதிவாதியின் மனைவியின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியானவர் சாட்சிகள் பத்மாவதி மற்றும் பிரதிவாதியின் தாயார் அவர்களிடமிருந்து வீட்டில் கையொப்பம் பெற்ற பிறகுதான் என்னிடம் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். சாட்சிகள் பத்மாவதி மற்றும் பிரதிவாதியின் தாயார் என்ன முன்னிலையில் கையொப்பம் இடவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு அண்டிபாண்டு என் முன்னிலையில் எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. மேற்படி அண்டிபாண்டு எங்கு எழுதப்பட்டது என்ற விவரங்கள் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வீட்டில் எழுதப்பட்டபிறகுதான் என்னிடம் கொடுத்தார்கள். மேற்படி அண்டிபாண்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி கையொப்பம் இட்டபிறகுதான் என்னிடம் கொடுத்தார். **சாட்சி மிகவும் கோபத்துடன் அழுதுகொண்டே பிரதிவாதி என்னை ஏமாற்றி என்னிடம் அண்டிபாண்டினை கொடுத்தார். அவர் என்னை ஏமாற்றிவிட்டார் என்று கூறினார்.** பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் எங்கேயும் மறுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அண்டிபாண்டானது முறையாகப் பெற்ற ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதை மோசடியாக உருவாக்கி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு 1000 ரூபாய்க்கு மேல் வருமானம் இல்லை என்று சொல்வதன் பேரில் எனக்கு எப்படி 50000 ரூபாய் வந்தது என்று சொன்னால் என் மகள் என்னிடம் கொடுத்தார். என் மகள் பெயர்கள் கோகிலா மற்றும் கலைவாணி ஆவர்.

4. மேற்படி பணத்தை கோகிலா மற்றும் கலைவாணி ஆகியோர் மாதாமாதம் கொடுத்தார்களா அல்லது மொத்தமாக கொடுக்கப்பட்டதா என்றால் அவர்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்ட பணத்தை பைசல் செய்து என்னிடம் கொடுத்தனர். மேற்படி மொத்தமாக எவ்வளவு பணம் என் மகள்களால் கொடுக்கப்பட்டது என்றால் ரூ.2,50,000 கொடுத்தார்கள்.

**(சாட்சியால் மேற்கொண்டு சாட்சி சொல்ல முடியாமல் தேம்பி அழுதார் அதனால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI Digitally signed by K NALEENI Date: 2025.11.03 17:32:24 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு